[1968 ஆகஸ்ட் 23]

**திரு. என். ராஜாங்கம் :** சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ஹாஸ்டல்களில் தங்கியிருப்பவர்களுக்கு மட்டுந்தான் இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. விடுதியில் இடம் கிடைக்காமல் எங்கேயாவது சாப்பிட்டு படித்தாகவேண்டுமென்று படிக்கிறவர்களுக்கு அது கொடுக்கப்படுவதில்லை. ஆகவே எங்கு தங்கி சாப்பிட்டுப் படித்தாலும் அவர்கள் உண்மையில் படிக்கிறார்கள் என்றால்—உள்ளூரில் இல்லாது வெளியூர்களில் தங்கிப் படிக்கிறார்கள் என்றால்—அவர்களுக்கு இந்த ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுத்தே தீரவேண்டுமென்று அரசாங்கம் ஒரு அறிக்கை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்க அங்கீகாரம் பெறப்படாத விடுதிகளில் தங்குவதற்காக அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. உள்ளபடியே அவர்கள் ஒழுங்காகப் படிக்கிறார்களா அல்லவா என்பது அரசாங்கக் கண்காணிப்பில் வரமுடியாது. ஒப்புதல் பெற்ற விடுதிகளாக இருந்தால் அந்தக் கண்காணிப்பு இருக்க முடியும். ஒப்புதல் பெறாத விடுதிகளில், எங்கேயாவது தங்கிப் படிப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட வசதி கிடைக்காதவர் களுக்கு நான்-ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் தருவது ஏற்கனவே இருந்து வருகிறது. முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரம் முடிந்து விட்டது. பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரம் அதற்காக எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். அடுத்து கேள்வி எண் 117.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இங்கு கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய பட்டியல் என்பது தெரியும். ஒரு உப கேள்வி தான் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இன்னொரு உப கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி, துணை வினாவைக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ரிப்போர்ட்டிலே ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு உண்டுறை செலவுக்காக சென்னையிலுள்ளவர்களுக்கு மாதம் 40 ரூபாய் என்றும், மற்ற ஊர்களில் உள்ளவர்களுக்கு மாதம் 35 ரூபாய் என்றும் இருக்கிறது. இது எந்தக் காலத்திலே போட்டதோ தெரியாது. ஆனால் இன்று உண்டுறை செலவுக்கு மாதத்திற்கு 70 ரூபாய், 80 ரூபாய் ஆகிறது. ஆகவே, இதை இரட்டிப்பாக ஆக்கி கையில் கொடுக்காவிட்டாலும் கூட அவர்களுக்குச் சோற்றைப் போட்டு திருப்திப் படுத்தும் அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இப்பொழுது ஒதுக்கியுள்ளது மிகவும் குறைவாக இருப்பதால் மத்திய சர்க்காருக்கு இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று மாநில அரசு எழுதியிருக்கிறது.

### பூம்புகார்.

*117 **வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இலக்கியச் சிறப்பு பெற்ற "பூம்புகார்" நகரத்தை பண்டைய சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் உல்லாசப் பயணிகள் பார்ப்பதற்குரிய இடமாக மாற்றியமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. எஸ். கணேசன் :** தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு பூம்புகார் நகரம் புதிய சிறப்புப் பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரக் காட்சிகளை உருவகப்படுத்தும் சிற்பக் கலைக்கூடம் அமைக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கால்கோள் நடத்தியிருக்கிருர் கள். அதையொட்டி உல்லாசப்பயணிகள் நிறையப்பேர் வந்து பார்த்துச் செல்வதால் அங்கு உல்லாசப்பயணிகள் விடுதி அமைக்க உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கால்கோள் விழா நடத்தியிருக்கின்ற அந்த எண்ணம் நல்ல முறையிலே வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு, உலகப்பயணிகள் அதிகமாக வருவதற்குக் கவனத்தை ஈர்க்கின்ற நிலையில் பூம்புகார் இடம் பெற்ருல், பிறகு பயணிகள் மாளிகை பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, பண்டைப் பூம்புகார் இருந்த இடத்தை ஆராய்ச்சி செய்ய திரு. மணவாள ராமானுஜம் அவர்களை முந்திய அரசாங்கத்தில் அமைத்தது உண்மையா ? அதுபற்றி இந்த அர சுக்கு ஏதேனும் விவரம் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டது அல்ல.

**திரு. கே. விநயகம் :** சார், பண்டைய காலத்து பூம்புகார், அதாவது இலக்கியத்திலே பெருமையாகச் சொல்லப்படும் பூம்புகார் இப்பொழுது இல்லை என்றும், அதைக் கடல் விழுங்கி விட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் புதிய பூம்புகார் யாரால் நிறுவப்பட்டது, அதற்கு கால் கோள் விழா ஏன் செய்ய வேண்டும். இதை விளக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பழைய சிறப்புக் குரிய பூம்புகார் நகரம் இங்குதான் இருந்ததாகக் கல்வெட்டுக்களின் மூல மாகத் தெரிகிறது. இதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் சரியான பதிலைத் தரலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள பூம்புகாரையொட்டித்தான் இந்த பூம்புகார் இருக்கிறது. ஒரு பகுதி அழிந்துதான் போய்விட்டது. இப்பொழுதுள்ள பூம்புகாரில் 6 அடிக்குக் கீழே தோண்டிப் பார்த்தால் ரோமானிய நாட்டு நாணயங்கள் கிடைத்த தாலும், ஜாடி ஓடுகள் கிடைத்ததாலும் இது அதன் பகுதிதான்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, இன்று பூம்புகார் என்று சொல்லப்படும் இந்தப் பகுதிக்கு காவிரிப்பூம்பட்டிணம் என்று ஒரு பெயரும் உண்டு. காவிரிப்பூம்பட்டிணத்தைக் கடல் விழுங்கி விட்டதென் றும், காவிரி கடலிலே கலப்பதாலே புகார் என்று சொல்லப்படுகிறது என்று கூறப்படுகிறதே அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** உண்மையை ஒத்துக்கொள்கிறேன்.

### கப்பலூர் தியாகராசர் ஆலை.

***118 விஞ—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கப்பலூர் தியாகராசர் ஆலையில் வேலை செய்பவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட் டுள்ளன ?

(உ) மற்றுமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது குறித்து நிர் வாகத்தினர் அரசிடம் மனுச் செய்துள்ளனரா ?

(ஏ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?